# தொண்டைநாட்டு அரசர்கள் பரிசிலர்க்குப் பரிசு வழங்குதல்

**முனைவர் சு. அ. அன்னையப்பன்**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
ISSN: 2454-3993

தொண்டைமான் இளந்திரையன் பாணர்களுக்கும் விறலியர்களுக்கும் பலவகையான பரிசுகளை வழங்குவான். அவை அவர்களுக்குப் பயனுள்ளதாகவும் வாழ்வாதாரத்தைப் பெருக்கக்கூடியனவாகவும் இருக்கும். இளந்திரையன் அவர்களைக் காக்கக்கூடியவனாகவும் அன்புடையவனாகவும் இருந்துள்ளான். இருண்டவானத்தில் ஒளியுடைய மதிதோன்றுவதைப் போன்ற வண்டுகள் ஒலிக்காத தாமரை வடிவில் அமைந்த பொற்றாமரைப்பூவைப் பாணர்களுக்குத் தலையில் அரசன் சூட்டுவான்; பாணனுடன் சென்ற விறலியர்க்குப் பகலில் பொழிகின்ற மழைத்துளிபோன்ற மின்னலை ஒத்த பொன்னாலாகிய மாலையினைச் சூட்டுவான்; குதிரைகளுக்குரிய இலக்கண நூல்களில் சொல்லப்பெற்றுள்ள சிறந்த வெண்மையான பிடரிமயிரினையுடைய நான்கு குதிரைகளைப் பூட்டிய தேரில் அவர்களை ஏற்றிஅனுப்புவான்; அத்துடன் போர்க்களத்தில் பகைவர்கள் புறமுதுகைக் காட்டி ஓடிச்சென்றபோது பயந்து விட்டுச்சென்ற பொருள்களையும் அவர்களுக்குப் பரிசிலாகத் தருவான்; இரவலர்கள் சென்ற அன்றே உடனே காலம் தாழ்த்தாது பரிசில்தந்து அனுப்புவான். இவன் கொடைமனம் படைத்தவனாகவும் கொடுப்பதில் இளகியமனம் படைத்தவனாகவும் இருக்கிறான் என்பதை,

**மங்குல் வானத்துத் திங்கள் ஏய்க்கும்**
**ஆடுவண்டு இமிரா அழல்அவிர் தாமரை**
**நீடுஇரும் பித்தை பொலியச் சூட்டி;**
**உரவுக் கடல் முகந்த பருவ வானத்துப்**
**பகற்பெயல் துளியின் மின்னு நிமிர்ந்தாங்கு,**
**புனைஇருங் கதுப்பகம் பொலிய, பொன்னின்**
**தொடைஅமை மாலை விறலியர் மலைய;**
**நூலோர் புகழ்ந்த மாட்சிய, மால்கடல்**
**வளை கண்டன்ன வால்உளைப் புரவி,**
**துணைபுணர் தொழில், நால்குஉடன்பூட்டி,**
**அரித்தேர் நல்கியும் அமையான், செருத்தொலைத்து**
**ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஒழித்த**
**விசும்புசெல் இவுளியொடு பசும்படை தரீஇ,**
**அன்றே விடுக்கும் அவன் பரிசில்,** **(பெரும்பாண்.480 -490)**

என்ற பாடல் தொடர்கள் புலப்படுத்துகின்றன. அவர்கள் தொண்டைமான் இளந்திரையன் வறண்ட காட்டில் திடீரென மழை பொழிந்ததைப் போன்று எங்களின் வறுமைப் பசிநீங்க பெரும் பரிசில்கள் அளித்தான்; பழைய பசி நீங்கிய எம்முடைய பெரிய சுற்றத்துடன் நாங்கள் கொடுத்தும் குறையாத பெரிய செல்வத்தைப் பெற்று வெண்மையான பிடரி மயிரினையுடைய குதிரையோடு வலிமையான யானைகளையும் வாரிக்கொண்டு அவன் ஊரிலிருந்து வருகின்றோம் எனும் கூற்றை,

**பெருவறம் கூர்ந்த கானம் கல்லெனக்**
**கருவி வானம்துளி சொரிந் தாங்குப்,**
**பழம்பசி கூர்ந்தஎம் இரும்பேர் ஒக்கலொடு**
**வழங்கத் தவா அப் பெருவளன் எய்தி,**
**வால்உளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்டு,**
**யாம்அவ ணின்றும் வருதும் நீயிரும், (பெரும்பாண்.23 -27)**

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. சிறுபாணாற்றுப்படைத் தலைவன் நல்லியக்கோடன் போர்க்களத்தில் போரில் ஈடுபட்டுள்ளபோது பொருள் விரும்பி வந்தோர்க்கும் பாணர்க்கும் வறுமைத்துன்பத்தைப் போக்குகிறான். அவன் நல்ல ஓட்டம் உள்ள தேரோடு குதிரையை வேகத்தைப்பின்னிடச்செய்யும் வனப்பும் வலிமையுடைய தாளினைக்கொண்ட ஒளியுடைத்தாகிய முகத்தினைக்கொண்ட வெள்ளைக் காளைகளையும் அதைச் செலுத்தும் பாகனொடு யானை, குதிரை, அணிகலன்களுடன் தந்து அன்றே செல்க என அனுப்புவான் என்பதை,

**திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புலம் அகற்றி**
**விறல்வேல் மன்னர் மன்எயில் முருக்கி**
**நயவர் பாணர் புன்கண் தீர்த்தபின்**
**வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு**
**பருவ வானத்துப் பால்கதிர் பரப்பி**
**உருவ வான்மதி ஊர்கொண் டாங்குக்**
**கூர்உளி பொருத வடுஆழ் நோன்குறட்டு**
**ஆரம் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு**
**சிதர்நனை முருக்கின் சேண்ஓங்கு நெடுஞ்சினைத்**
**ததர்பிணி அவிழ்ந்த தோற்றம் போல**
**உள்அரக்கு எறிந்த உருக்குறு போர்வைக்**
**கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி**
**ஊர்ந்துபெயர் பெற்ற எழில்நடைப் பாகரொடு**
**மாசெலவு ஒழிக்கும் மதனுடை நோன்தாள்**
**வாள்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ**
**அன்றே விடுக்கும் அவன் பரிசில்; (சிறுபாண்.246 -261)**

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன. அவர்கள் அவனிடமிருந்து சிறுகண்யானையும் பெரியதேரும் பெற்றுக்கொண்டு நாங்கள் அங்கிருந்து வருகிறோம் என்று கூறுவதை சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி

**யாம்அவண் நின்றும் வருதும் (சிறுபாண்.142- 143)**

என்ற பாடல் அடி காட்டுகின்றது. பொருநர்க்கு ஆயினும் அறியுடையோர்க்கு ஆயினும் அரிய மறைகளைக் கற்றுணர்ந்த நாவினையுடைய அந்தணருக்கு ஆயினும் அவனுடைய அரண்மனைக் கதவுகள் அடையாது திறந்தே இருக்கும் என்பதை,

**பொருநர்க்கு ஆயினும், புலவர்க்கு ஆயினும்**
**அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்**
**கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன**
**அடையா வாயில்அவன் அருங்கடைகுறுகி** **(சிறுபாண்.203 -205)**

என்ற பாடல் தொடர்கள் காட்டுகின்றன. இங்கு தேரும் வலிமையான தேர்ச்சக்கரமும் செய்யப்பட்டுள்ளன; ஒருநாட்டிற்குரிய கைவினைப் பொருட்களும் போர்க்குரிய போர்க்கருவிகளும் பிற பொருட்களும் உருவாக்கப்பட்டுள்ளது என்பது காணத்தக்கது.

மலைபடுகடாம் எனும் நூலின் பாட்டுடைத் தலைவன் பரிசிலர்கள் பல நாட்கள் தங்கி நாங்கள் எங்கள் பழைய ஊருக்குச் செல்வோம் என மெதுவாகக் கூறினால், பொற்றாமரையை அணிய, விறலியர் அனைவரும் பலவகை ஆபரணங்களை அணிய, நீர் இயங்குவது போன்று செல்லுகின்ற உயர்ந்ததேர்களையும் பகைவர் போர்க்களத்திலிருந்து பெற்றமலை போன்ற யானைகளையும் ஒலிக்கின்ற மணிகளையுடைய ஏறுடைய பசுக்கூட்டத்தையும் பொன்னாலாகிய அணிகலன்களை அணிந்த மயிர்வெட்டப் பெற்றகுதிரைகளையும் மண்தின்னும்படியாகக் கிடந்த பொருட்குவியலாகிய எல்லாவற்றையும் தருவான். அவன் வறுமையில் வரும் புலவர்கட்கு கைநிறைய அணிகலன்களைச் சொரிவான்; மழை பெய்வதைப்போன்று உடனே பரிசில்கொடுத்து காலம்தாழ்த்தாது அன்றே அனுப்புவான். இப்பகுதியில் அரசாண்ட அரசர்களும் குறுநிலமன்னர்களும் வள்ளல்களும் கொடுக்கும் ஆற்றல் உடையவர்களாக இருந்திருக்கிறார்கள்; பிறர்க்கு உதவும் மனம் உள்ளவர்களாக இருந்திருக்கின்றார்கள்; தம்குடிமக்களையும் பிறகுடிமக்களையும் வாழ வழிவகை செய்திருக்கிறார்கள் என்பதைப் பின்வரும் பாடல் அடிகள் சுட்டுகின்றன:

**பலநாள் நிற்பினும் பெறுகுவிர் நில்லாது**
**செல்வேம் தில்லஎம் தொல்பதிப் பெயர்ந்தென**
**மெல்லெனக் கூறி விடுப்பின் நும்முள்**
**தலைவன் தாமரை மலைய விறலியர்**
**சீர்கெழு சிறப்பின் விளங்குஇழை அணிய**
**நீர்இயக் கன்ன நிரைசெலல் நெடுந்தேர்**
**வாரிக் கொள்ளா வரைமருள் வேழம்**
**கறங்குமணி துவைக்கும் ஏறுடைப் பெருநிரை**
**பொலம்படைப் பொலிந்த கொய்சுவல் புரவி**
**நிலம்தினக் கிடந்த நிதியமொடு அனைத்தும்** **(மலை.க.567 -575).**

நன்னன் சேய் நன்னன் பரிசிலர்களை விருந்தினர்களாக ஏற்கும் மரபினை உடையவன். அவன் பொது அம்பலங்களில் தங்குவோர், போரில் வெற்றியடையும் முருகன் போன்ற நன்னனை நினைத்து வந்தோர், அவர் நம்மால் போற்றத்தக்கோர் எனக் கருதிக்கண்டோர் எல்லாம் அன்புடன் இனிதுநோக்கி விருந்தினராகக் கருதி ஏற்றுக்கொள்ள நெருங்கிவந்து உம்முடைய மிகுதியான வருத்தம் நீங்க வரவேற்பான் என்பதை,

**மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்**
**வெல்போர்ச் சேஎய்ப் பெருவிறல் உள்ளி**
**வந்தோர் மன்ற அளியர் தாமென**
**கண்டோர் எல்லாம் அமர்ந்து இனிதின் நோக்கி**
**விருந்திறை அவரவர் எதிர்கொளக் குறுகிப்**
**பிரிபுலம்பு அலைத்தநும் வருத்தம் வீட,** **(மலை.க.492 -497)**

என்ற பாடல் அடிகள் குறிக்கின்றன. நன்னன் சேய் நன்னன் தன் செல்வச்செழிப்புடைய மனையின் முற்றத்தில் உங்கள் சுற்றத்தோடு அத்தாணி மண்டபத்து இருத்துவான்; தன் குறைந்த அறிவால் வந்தோருக்கு வான்போன்ற பரந்த உள்ளத்தோடு உம்மைக்காட்டிலும் வரவேற்க மகிந்த உள்ளத்துடன், உவகையுடன், உங்களை முகம் மலர்ந்து இனிது நோக்குவான் என்பதை, வந்தது சாலும் வருத்தமும் பெரிதனப்

…. ….. ….. ….. ….. ….. ….. ….. …

**திருநகர் முற்றம் அணுகல் வேண்டிக்**
**கல்லென் ஒக்கல் நல்வலத்து இரீஇ**
**உயர்ந்த கட்டில் உரும்பில் சுற்றத்து**
….. ………….. …………….. …..
**பரந்திடம் கொடுக்கும் விசும்புநோய் உள்ளமொடு**
**நயந்தனிர் சென்ற நும்மினும் தான்பெரிது**
**உவந்த உள்ளமோடு அமர்ந்தினிது நோக்கி** **(மலை.க.546 - 560)**

என்ற பாடல் அடிகள் குறிக்கின்றன. அவன் பிறர்க்குக் கொடுக்கும் தன்மையினைக் கொண்டவனாகக் காணப்பட்டுள்ளான். அவன் வழியிலேயே அவனுடைய குடிமக்களும் அப்பண்பினையே பின்பற்றியுள்ளனர். பிறரை வாழவைக்கும் பண்பு அவனுக்கும் அவனுடைய குடிமக்களுக்கும் இயல்பாகவே காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

### பாணர்களுக்கு ஆடையளித்தல்

தொண்டைமான் இளந்திரையனிடத்துப் பரிசுபெற்ற பாணன் தன்னை எதிர்ப்பட்ட பெரும்பாணன் ஒருவனைநோக்கி நாங்கள் தொண்டைமான் இளந்திரையனிடம் சென்று பெருஞ் செல்வத்தையும் குதிரைகளையும் யானைகளையும் பெற்றுவருகின்றோம்; நீங்களும் சென்றால் உங்கள் வறுமை நீங்கி எல்லாச் செல்வங்களையும் பெற்றுவருவீர்கள் என்று கூறி வழி அனுப்புகிறான். தொண்டைமான் இளந்திரையன் நாவலம் சோலையாகிய தமிழகம் அழிவின்றி சிறப்பாக விளங்க வேண்டும் என்று கருதி இந்த உலகத்தின் இளமை, யாக்கை, செல்வம் இவற்றின் நிலையாமையைக் கருதி நிலைபேறான கொடையைச் செய்தான். அவன், பாணர்களைக் கண்டவுடன் முதலில் அவர்களின் அழுக்கடைந்த பாசிபோன்ற கந்தல் ஆடையை நீக்கி மென்மையான வெண்புகைபோன்ற நூலால் செய்யப்பட்ட ஆடையைப் பாணனும் அவனுடைய சுற்றத்தினர் அனைவரும் அணியும்படி முதலில் கொடுத்தான்; அதன்பின்னர்தான் அவர்களோடு பேசினான். காரணம் அவன் அழுக்கான ஆடைகளோடு பாணர்கள் இருந்து அவர்களோடு பேசினால் அவர்களுக்குத் தாழ்வு மனப்பான்மை வரும்; அதைப் போக்குவதற்காக அவர்கள் வந்தவுடன் புதிய ஆடையைத் தருவது பழக்கமாகவும் பண்பாடாகவும் வைத்திருந்துள்ளான். இத்தகைய பண்பாட்டுடைத் தொண்டைமான் இளந்திரையனும் அவனுடைய குடிமரபினரும் கடைப்பிடித்து வந்துள்ளனர்; அந்நாட்டு மக்களும் வழிவழியாகப் பின்பற்றி வந்துள்ளனர் எங

**நாவல்அம் தண்பொழில் வீவுஇன்று விளங்க,**
**நில்லா உலகத்து நிலைமை தூக்கி,**
**அந்நிலை அணுகல் வேண்டி, நின்அரைப்**
**பாசி அன்ன சிதர்வை நீக்கி,**
**ஆவிஅன்ன அவிர் நூற் கலிங்கம்**
**இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குஉடன் உடீஇ,** **(பெரும்பாண்.465 - 470)**

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடல் அடிகள் உணர்த்துகின்றன. இப்பாடல் அடிகள் தொண்டை நாட்டு வட்டாரப் பண்பாட்டையும் வழக்காற்றையும் எடுத்துக்கூறினாலும் இவை செந்தமிழ்நிலங்களுக்குரிய பொதுமையான பண்பாடுகளாகச் சிறந்து விளங்குகின்றன. தொண்டைமண்டலப் பகுதியினை ஆண்ட குறுநில மன்னனாகிய நல்லியக்கோடன் அரசன், ஆசிரியன், தாய், தந்தை, தன்முன்னோராகிய முதியோர்க்குப் பல காலும் குவித்த கையுடையன் என்றும் வீரர் எறிதற்கும் மகளிர்க்கும் மலர்ந்த மார்பினன் என்றும் ஏரினையுடைய உழவர்க்கு நிழல் தருகின்ற செங்கோலையுடையவன் என்றும் தேரினையுடையவன் என்றும் அவனைப் புகழ்ந்துபேசி முடிக்காத அளவில் குற்றமற்ற மூங்கிலை உரித்தாற் போன்ற மென்மையான தூய்மையான ஆடையை முதலில் உடுக்கச் செய்வான். இவ்வாறு அவன் செய்வது ஒத்ததன்மையை உருவாக்குவதற்காகும். தொண்டைமண்டலப் பண்பாடு என்பது 24 கோட்டங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டதாகவும் போற்றப்பட்டதாகவும் இதில் அறியப்படுகிறது. இம்மண்டலத்தில் பிறரைப் போற்றுகின்ற பண்பும் மற்றவரை மதிக்கின்ற பண்பும் கொடுக்கின்ற மனப்பண்பும் சிறந்து விளங்கியிருக்கின்றன. எனவேதான், தொண்டைமண்டல அரசர்களும் தொண்டைமண்டலக் குறுநிலமன்னர்களும் மக்களும் இன்னார் எளியார் என்று பாராமல் எல்லோருக்கும் வாரிவழங்குகின்ற ஆற்றலை உடையவர்களாகக் காணப்பட்டுள்ளனர். தொண்டைமண்டல முன்னோர்கள் இப்பண்பை வழிவழியாகப் பின்பற்றியுள்ளனர். இதனால்தான் இது சிறந்து விளங்குகின்ற மண்டலப்பகுதியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது என்பதைச் சிறுபாணாற்றுப்படையில் வெ

**முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும்,**
**இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்**
**ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்**
**தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்**
**நீசில மொழியா அளவை மாசுஇல்**
**காம்புசொலித் தன்ன அறுவை உடீஇப்** **(சிறுபாண்.235 - 236)**

என்ற தொடர்கள் உணர்த்துகின்றன. தொண்டைமண்டலப் பகுதியை ஆண்ட குறுநிலமன்னனாகிய நன்னன் சேய் நன்னனும் தன்னை நாடிவருகின்ற இரவலருக்கும் பரிசிலருக்கும் பாணர்களுக்கும் கொடுக்கும் தன்மையுடையவன்; பாணர்களுக்குத் தூய்மையான ஆடையை முதலில் தருபவன்; கொடைமனம் படைத்தவன்; உவகையுடன் முகம்மலர்ந்து இனிது நோக்குபவன்; நூல்இழை போகும் இடம்காணமுடியாத நூலால் செய்யப்பெற்ற ஆடையை முதலில் கொடுப்பவன் என்பதை,

**உவந்த உள்ளமோடு அமர்ந்தினிது நோக்கி**
**இழைமருங்கு அறியா நுழைநூல் கலிங்கம்**
**எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ** **(மலை.க.560 - 562)**

என்ற மலைபடுகடாம் நூல் வரிகள் உணர்த்துகின்றன. தொண்டைமண்டலப் பண்பாட்டுக்கூறுகள் செந்தமிழ்நிலத்துப் பன்னிரண்டு நிலங்களிலும் காணக்கிடக்கின்றன. பொதுநிலையில் எல்லா அரசர்களும் குறுநில மன்னர்களும் கலைஞர்கள் தங்களைக் காணவரும்போது, அவர்கள் வறுமைநிலையை உணர்ந்து அவர்களுக்குப் புதிய ஆடைகளைத் தந்துள்ளனர். இவைகள் சோழமண்டலப் பண்பாட்டுக் கூறுகளிலும் காணப்படுகின்றன. கரிகால் பெருவளத்தான் நாங்கள் கட்டியிருந்த ஆடை வேர்வையால் நனைந்து கிழிசலைத் தைத்திருந்த இடங்கள் தெரிய ஈரும் பேனும் இணைந்திருந்து மிகவும் அழுக்காக இருந்தது. அவன் அதை உடனே நீக்கிவிட்டுப் பாம்பின்தோல் போன்ற மிகவும் மென்மையான பார்த்தால் இழைதெரியாத பூத்தொழிலையுடைய அழகான ஆடையை எங்களுக்குத் தந்தான் என்று பாணர்கள் கூறுகின்றனர். அவன் அழுக்கடைந்த

பாசி போன்ற தைக்கப்பெற்ற ஆடையை நீக்கி கரையில் முடிச்சுக்களையுடைய பட்டாடையை உடனே தருவான் என்பதை இங்குக் காணமுடிகிறது. தொண்டை மண்டலப் பண்பாட்டுக்கூறுகள் கரிகால்பெருவளத்தான் காலத்திற்கு முன்பே சோழமண்டலத்தில் அக்கூறுகள் பரவி இருந்துள்ளன என்பதைப் பொருநர் ஆற்றுப்படையில்,

**ஈரும் பேனும் இருந்து இறைகூடி,**
**வேரொடு நனைந்து, வேற்றுஇழை நுழைந்த**
**துன்னற் சிதாஅர் துவர நீக்கி,**
**நோக்கு நுழைகல்லா நுண்மைய, பூக்கனிந்து**
**அரவுஉரி அன்ன, அறுவை நல்கி,** **(பொ.ஆ.79 - 83)**

எனவும்,

**கையது கேளா அளவை, ஒய்யென,**
**பாசி வேரின் மாசொடு குறைந்**
**துன்னற் சிதாஅர் நீக்கித் தூய**
**கொட்டைக் கரைய பட்டு உடைநல்கி,** **(பொ.ஆ.152 - 155)**

எனவும் பாடல் அடிகள் சான்றுகள் காட்டுகின்றன. இங்கு தொண்டைமண்டலப் பண்பாட்டுக்கூறுகள் சோழமண்டலப் பண்பாட்டுக்கூறுகளில் இடம்பெற்றுள்ளன என்பதைக் காணமுடிகிறது.

**பாணர்களுக்குச் சுவைநீர் அளித்தல்**

வறுமைநிலையில் வந்த பாணர்களுக்கு முதலில் புத்தாடையை அணியக் கொடுத்துவிட்டு, அவர்களுடைய களைப்பைப் போக்குவதற்காக மிகுந்த சுவையான சுவைநீரைக் கொடுத்தனர்; கள்ளைக் கொடுத்தனர்; தூய்மையான தண்ணீரைக் கொடுத்தனர்; பாம்பு சினந்து எழுந்தது போன்ற எழுச்சியைத்தரும் கள்ளின்தெளிவைத் தந்துள்ளனர். சிறுபாணாற்றுப்படைத் தலைவன் நல்லியக்கோடன் விருந்தினர்களுக்கும் பாணர்களுக்கும் இவ்வாறாகத் தந்துள்ளான் என்பதை,

**காம்புசொலித் தன்ன அறுவை உடீஇப்**
**பாம்புவெகுண் டன்ன தேறல்நல்கிக்** **(சிறுபாண்.236 - 237)**

என்ற பாடல் தொடர்கள்மூலம் காணக்கிடக்கின்றன. தொண்டைமான் இளந்திரையன் சுவையான அமுதம் போன்ற ஏனைய மூடிவைத்திருந்த உணவுவகைகளையும் அவர்கள் விரும்பும் நிலையில் உடனிருந்து முகம்மலர்ந்து குறையாத விருப்புடன் ஊட்டினான் என்பதை, அருங்கடித் தீம்சுவை அமுதொடு, பிறவும்,

**விருப்புடை மரபின் கரப்புடை அடிசில்,** **(பெரும்பாண்.475 -476)**

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன. சங்கப்பத்துப்பாட்டு நூல்களில் தொண்டைமண்டலப் பண்பாட்டுக்கூறுகள், சோழமண்டலப் பண்பாட்டுக் கூறுகளில் கலந்துவருவதை மிகுதியாகக் காணப்படுகின்றன. பொருநர் ஆற்றுப்படையிலும் கரிகால்பெருவளத்தான் வருகின்ற இரவலர்க்குக் குளிர்ந்தநீரைக் கொடுத்துள்ளான். மேகம்போன்ற கரியகூந்தலையுடைய மகளிர் எங்களுக்குப் பொற்கலங்களில் தேறலை ஊற்றித்தந்தனர்; பலமுறைதந்தனர்; அதை மகிழ்வோடு உண்டு எங்கள் வழித்துன்பம் அனைத்தையும் போக்கி மகிழ்ந்திருந்தோம் என்று பாணர்கள் கூறுவதைப் பின்வரும் பாடல் அடிகள் காட்டுகின்றன:

**மழைஎன மருளும் மகிழ்செய் மாடத்து,**
**இழைஅணி வனப்பின் இன்நகை மகளிர்,**
**போக்குஇல் பொலங்கலம் நிறைய, பல்கால்**
**வாக்குபு தரத்தர வருத்தம் வீட**
**ஆரஉண்டு, பேர் அஞர் போக்கி, (பொ.ஆ.84 - 88).**

**விருந்தோம்பும் பண்பு**

தொண்டை மண்டலப் பண்பாட்டுக் கூறுகளில் விருந்தோம்பல் சிறந்த பண்பாகக் காணப்படுகின்றது. அங்குள்ள அரசாளும் மன்னர்களும் வாழும் குடிமக்களும் வருகின்ற விருந்தினர்களுக்கு மனமகிழ்ச்சியோடு விருந்து அளிக்கின்றனர்; உள்ளன்போடு கவனித்துக் கொள்கின்றனர், மனநிறைவோடு பார்க்கின்றனர்; அவர்கள் உடனிருந்து உணவைப்பகிர்ந்து அளிக்கின்றனர்; தொண்டைமான் இளந்திரையன் அவைக்களத்தில் இரவலர்களுக்கும் பரிசிலர்களுக்கும் வளைந்த வாளால் வெட்டப்பட்ட ஊனின் துண்டங்களை நல்ல நெல் சோற்றுடன் சமைத்தலில் வல்லுனனாகிய சமையல்காரனைக் கொண்டு செய்வித்துத் தானும் உடனிருந்து அவர்கள் அனைவரையும் உண்ணச்செய்தான். அவன் சுவையான அமுதம்போன்ற ஏனைய, மூடிவைத்திருந்த உணவுவகைகளையும் அவர்கள் விரும்பும்நிலையில் உடனிருந்து முகம்மலர்ந்து குறையாத விருப்புடன் ஊட்டினான். உணவுப்பொருள்கள் வைத்திருந்த தட்டங்கள் நட்சத்திரங்கள் போன்று வெள்ளியால் செய்யப்பெற்றிருந்தன. சோறு வைத்திருந்த தட்டம் நிலாப்போன்று பெரியதாக வெள்ளியால் அமைந்திருந்தது என்பதை,

**கொடுவாள் கதுவிய வடுஆழ் நோன்கை**
**வல்லோன் அட்ட பல்ஊன் கொழுங்குறை**
**அரிசெத்து உணங்கிய பெருஞ்செந் நெல்லின்**
**தெரிகொள் அரிசித் திரள்நெடும் புழுக்கல்,**
**அருங்கடித் தீம்சுவை அமுதொடு, பிறவும்,**
**விருப்புடை மரபின் கரப்புடை அடிசில்,**
**மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி,**
**மகமுறை, மகமுறை நோக்கி, முகன்அமர்ந்து,**
**ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டி,**
**மங்குல் வானத்துத் திங்கள் ஏய்க்கும் (பெரும்பாண்.471 - 480)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. குறிப்பாக இது காஞ்சிமாநகர் பகுதியினைக் குறிக்கிறது.

**துணைநூல் பட்டியல்**

1. சுப்பிரமணியன், ச.வே., 2003, பத்துப்பாட்டு, கோவிலூர்: கோவிலூர் மடாலயம்.
2. சுப்பிரமணியன், ச.வே., 2006, சங்க இலக்கியம் (முழுவதும்), சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
3. குருநாதன் (மற்றும் பலர்.)., 1988, சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி மூன்று, தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.